முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் அர்ச்சுனர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

24.01.2019, வியாழக்கிழமை

1. **ஞானயுகம் படைக்க வந்தநல்**
**ஞானியே ஆறுமுக அரங்கனே**
**தானதருமம் வளர்த்து வருகின்ற**
**தவசியே உன் பெருமை கூறியே**

2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி கலை திங்கள்**
**தெரியவே தச திகதி குருவாரம்**
**(விளம்பி வருடம் தை மாதம் 8ம் நாள் 22.01.2019, செவ்வாய்க்கிழமை)**
**தேசிகனுக்கு அர்ச்சுனர் யானும்**

3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர் தருமம் வளர்க்கும் அரங்கனே
ஞானயுகம் மாற்றும் சிறந்த ஞானி
ஞாலமதில் யாவரும் ஏற்று வருக

4. வருகவே மக்களிடை மனத்தெளிவும்
வல்லமையான சத்திய நெறியும்
முருகப்பெருமான் அருளும் பலமும்
முழுமையான ஞானமும் கிட்டும்

5. கிட்டவே கலிகாலம் வழியான
குறைபாடுகள் கொடுமை செயல்கள்
திட்டமிட்ட ஊழல்கள் பழிபாவங்கள்
தீவிரவாதம் தேசத்துரோக செயல்கள் எல்லாம்

6. எல்லாம் விலகி நன்மை கூடும்
எதிர்மறைகளான சக்திகள் அழியும்
இல்லாமை எனும் நிலை மாறும்
எதிலும் தருமமும் வழிபாடும் பெருகும்

7. பெருகவே அரங்கன் சேவைகள்
பெருமுலகில் தொண்டர்கள் உருவாக
பேருலகே சேவைகள் வளர்ந்து
பெருமைபட ஞானயுகம் ஆகும்

8. ஆகவே அற்புதம் நடத்த வந்த
அப்பனே ஞானத்தலைவனின்
யுகமாற்ற ஞானியே அரங்கனின்
உலகமெங்கும் உன் சன்மார்க்கம்

9. சன்மார்க்கம் பரவ வளரவே
சமதர்ம சமத்துவமான உலகம்
துன்பமிலா அமைதி மிகுந்த நல்
தூய உயர் யுகமாக அமையும்

10. அமையவே துறையூர் மண்ணாம்
ஆறுமுகன் ஏழாம் படை வீட்டிலிருந்து
சமதர்ம சன்மார்க்க நெறி
சரவணச் சுடராக கிளம்பி வர

11. வருகவே அரங்கன் சீடர் மூலம்
வரமாக பல தேசம் பரவி வர
முருகா என தருமமோடு ஏற்பவரெல்லாம்
முழுமை பெற்ற ஞானி ஆவரப்பா ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் அர்ச்சுனர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

கலியுகம் மாற்றி ஞானயுகம் படைத்திடவே வந்துதித்திட்ட மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே உலகமெலாம் தானதருமங்களை வளர்த்து வருகின்ற மகா தவசியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 10ம் நாள் 24.01.2019, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே அர்ச்சுனர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அர்ச்சுனர்.

உயர்வான தர்மங்களை அளவிலாது செய்து வரும் முருகப்பெருமானின் அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனே யுகமாற்றம் செய்திட அவதரித்திட்ட யுகமாற்ற ஞானி ஆவார். சிறப்புமிக்க மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை மக்களெல்லாம் உளமார ஏற்றுக் கொண்டு குருவாய் ஏற்று அரங்கனைப் பின்தொடர்ந்து வரவர, அரங்கமகானின் அருளாசியினால் அவர்களுக்குள்ளே மனத்தெளிவும் வல்லமைமிக்க நெறியான சத்தியநெறியும் அவர்களுக்கு கிடைப்பதோடு ஞானத்தலைவன் முருகப்பெருமானின் அருளாசிகளையும் அவர்கள் பெற்று முருகப்பெருமானின் அருளினால் முழுமையான ஞானத்தையும் அடைந்திடுவார்கள்.

ஆதலால் இவ்வுலகினில் கலிகால மாயையினால் உண்டான குறைபாடுகள் எல்லாம் நீங்கி உலகினில் கொடுமையான செயல்களெல்லாம் விலகிவிடும், திட்டமிட்ட ஊழல்கள் எல்லாம் வெட்டவெளியாகி ஊழல் செய்ய முடியாதவாறு ஆகிடுவதுடன் பழிபாவ செயல்கள் எல்லாம் உலகினின்று மறைந்துவிடும், கொடுமையானதான தீவிரவாத செயல்கள் எல்லாம் உலகினின்று அடியோடு விலவிடும், தேசத்துரோக செயல்கள் எல்லாம் விலகி உலகினில் நன்மையே மிகுந்து நிற்கும், எதிர்மறையான தீய சக்திகள் எல்லாம் அழிந்துவிடும், இல்லாமை எனும் வறுமை நிலைமை மாறி ஆனந்தம் உண்டாகும். எங்கும் எதிலும் தர்மமே செழித்தோங்கும், தெய்வ நம்பிக்கை பெருகிடும், உலகினில் பாவபுண்ணியங்களை மக்கள் உணர்ந்து பழிபாவங்களுக்கு அஞ்சி தர்மவழி நடப்பார்கள், தெய்வ வழிபாடு அதிகரிக்கும்.

உலகினில் உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தர்ம வழியினை ஏராளமானோர் ஏற்று பின்பற்றி நடந்து உலகமெலாம் அரங்கனின் தர்மசேவைகள் பெருமளவில் செயல்படுத்தப்பட்டு உலகினில் ஏராளமான அரங்கனின் தொண்டர்கள் உருவாகிடுவார்கள். ஆதலினால் உலகம் முழுதும் அரங்கமகானின் தொண்டர் படையால் பெரும் பெரும் தரும

சேவைகள் எல்லாம் செய்யப்பட்டு தர்மம் உலகினில் செழித்தோங்கி இந்த உலகமே பெருமைமிக்க ஞானஉலகமாக மாறிடும்.

ஆதலினாலே இவ்வுலகினில் அநேகம் அநேகம் அற்புதங்களை நிகழ்த்திட வந்திட்ட மகா ஞானியே ஞானத்தலைவன் முருகப்பெருமானின் யுகமாற்ற மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே உலகமெங்கும் உமது சன்மார்க்கம் பரவிட, பரவி வளர்ந்திட வளர்ந்திட உலகினில் சமதர்மம் உண்டாகும், சமத்துவமான உலகம் உண்டாகும், துன்பம் இல்லாத அமைதியான நல்லுலகம் உருவாகி தூய்மையும் வாய்மையும்மிக்க உயர் ஞான உலகமாக அமைந்திடும்.

இவ்விதமே உலகினை மாற்றி அமைக்கவே ஞானபூமியாம் துறையூரினில் உள்ள முருகப்பெருமானின் சர்வ வல்லமையுடன் அமைத்திட்ட ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலிலிருந்து சமதர்ம சன்மார்க்க நெறி சரவணஜோதிச் சுடராக கிளம்பி வருகின்றது, ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சீடர் மூலமாக. அது அரங்கனின் சீடர்கள் மூலம் உலகமெங்கும் பல தேசங்களில் பரவி வரவர, உலகினில் உள்ள மக்களெல்லாம் முருகா, முருகா, முருகா என ஞானத்தலைவன் முருகப்பெருமானை வழிபடு தெய்வமாக ஏற்று தருமங்களை தாராளமாய் செய்து வரவர, முருகப்பெருமானை குலதெய்வமாய் ஏற்று வணங்கி தர்மங்கள் செய்து புண்ணியவான்களாக ஆகிய அவரெல்லாம் அரங்கன் அருளினால் ஞானிகளாக ஆகிடுவார்களப்பா என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் அர்ச்சுனர்.

–சுபம்–